2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

புதுக்கோட்டைக்குத் தனி மின் பிரிவு.

*வினா எண் 151—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தனியாக மின்சார சிஸ்டம் (Pudukkottai Electricity System) அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1—6—78 முதல் புதுக்கோட்டை மாவட்டத்திற்கென்று தனியாக மின்சார சிஸ்டம் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, புதிதாக அங்கே ஒரு சிஸ்டத்தை ஆரம்பித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த சிஸ்டத்திற்கு அதிகமாகப் பணியாளர்கள்—குறிப்பாக கணக்காயர்கள் தேவைப்படுவதால் திருச்சி சிஸ்டத்திலிருந்து மாற்றம் செய்யப்படுகிறார்கள். அப்படி மாற்றம் செய்யும்போது ஒரே இடத்தில் வேலை செய்து வருகின்ற கணவன், மனைவி இருவரையும் பிரிக்கின்ற முறையிலே விருப்பத்திற்கு மாறாக மாற்றம் செய்கிறார்கள் என்று புகார் சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் தவறான நடைமுறையை கைவிட்டுவிட்டு, யார், யார் மாற்றம் செய்ய விரும்புகிறார்களோ அவர்களை மட்டும் மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய தகவல் அரசுக்கு இல்லை.

திருநெல்வேலி—தூத்துக்குடி மின் பிரிவு.

*வினா எண் 152—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-தூத்துக்குடி மின்சார விநியோக கம்பெனியை தமிழ்நாடு மின்சார வாரியம் கையகப் (acquisition) படுத்தி ஆண்டுகள் பல ஆகியும் மின் வாரிய தொழிலாளர்களுக்கும், கம்பெனி தொழிலாளர்களுக்கும் வேலைப்பளு சலுகைகளில் வித்தியாசம் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அதை நீக்க அரசின் நடவடிக்கை என்ன?